## என் ஆத்துமம்

1. என் ஆத்துமம் ஆண்டவரை மகிமைப் படுத்துகின்றது
   என் மீட்பராம் இறைவனிடம் என் மனம் மகிழ்கின்றது
2. தன் அடிமைத் தாழ்மையினை அவர் கருணைக்கண்
   கொண்டதினால் இதோ எல்லாத் தலைமுறைகளும்
   என்னை பாக்கியவதி என்பார்
3. ஏனெனில் வல்லபமுள்ளவர் எனக்கு பெரியென புரிந்தார்
   அவர் பெயர் புனிதம் ஆனதாம்
4. அவருடைய கிருபையும் தலைமுறை தலைமுறையாய்
   அவருக்குப் பயந்து நடப்போர்க்கே
5. தன் கரத்தின் வலிமை காட்டி இருதய சிந்தனையில்
   கர்வமுள்ளோரைச் சிதறடித்தார்
6. வல்லபமே உள்ளோரை அவர் இருக்கையிலிருந்து தள்ளி
   தாழ்ந்தோரை உயர்த்தினார்
7. பசித்தேதான் இருப்பவரை அவர் நன்மைகளால் நிரப்பி
   தனவான்களை வெறுமையாக அனுப்பினார்
8. தன் கிருபையை நினைவு கூர்ந்து தம்
   தாசராம் இஸ்ராயேலைக் காத்திட்டார்
9. நம் ஆம்பிதாப் பிதாக்களாம் அபிரகாமுக்கும், ஊழியுள்ள காலம்
   அவரது வித்துக்கும் அவர் தந்த வாக்குறுதி அதுவேயாம்
10. பிதாவுக்கும், சுதனுக்கும் திவ்ய பரிசுத்த ஆவிக்கும்
    தோத்திரம் உண்டாக
11. ஆதியிலே இருந்ததுபோல இப்பொழுதும்
    எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக - ஆமென்.

# கிறிஸ்து பிறப்பு விழா நவநாள்

அ. மனையில், ச.ச.

**தீபகம்**
**தொன் போஸ்கோ மறைப்பணி நிலையம்**
45, லாண்டன்ஸ் சாலை,
சென்னை - 600 010.
போன் : 044 - 264 2125 / 24
E-mail : manayil45@gmail.com

தடையில்லை :

அருட்பணி ஆ. ஜோ. அடைக்கலம்
முன்மைக் குரு
18-11-1980

M.அருட்பணி அருள்ராஜ்
இயக்குநர்
மறைப்பணி மேய்ப்பு நிலையம்
சாந்தோம், சென்னை-600 004.
20-1-2004

அச்சிடலாம் :

+ அருளப்பா
பேராயர், சென்னை - மயிலை
18-11-1980

+அருள்தாஸ் ஜேம்ஸ்
பேராயர் சென்னை-மயிலை
24.01.2004

முதல் பதிப்பு 1980-2000 பிரதிகள்
2ஆம் பதிப்பு 1982-2000 பிரதிகள்
3ஆம் பதிப்பு 2004-2000 பிரதிகள்
4ஆம் பதிப்பு 2007-2000 பிரதிகள்
5ஆம் பதிப்பு 2010-3000 பிரதிகள்
6ஆம் பதிப்பு 2011-2000 பிரதிகள்
7ஆம் பதிப்பு 2012-2000 பிரதிகள்
8ஆம் பதிப்பு 2013-5000 பிரதிகள்



சென்னை மயிலை பேராயர் இல்லம்
சாந்தோம், சென்னை-600 004.
24 மார்ச் 2004

## ஆசியுரை

தாய்த் திருச்சபையானது ஓராண்டில் இருபெரும் நவநாட்களைச் சிறப்பிக்கின்றது. எனில் அது மிகையாகாது. ஒன்று கிறிஸ்து பிறப்பு விழா நவநாள் மற்றொன்று தூய ஆவி விழா நவநாள். மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். ( லூக் 2:11 ) என்ற கபிரியேல் வானதூதரின் அறைகூவலுக்கு இன்றைய எதிரொலியாக அமைந்து இருப்பது தான் அருட்பணி அ. மனையில் ச.ச. அடிகளார் தயாரித்துள்ள **“கிறிஸ்து பிறப்பு நவநாள் கையேடு”** இவரின் பெருமுயற்சிக்கு என் பாராட்டுகள். பொருள் நிறைந்த இந்த கையேட்டினை இறைமக்கள் பயன்படுத்தி, பயன்பெற தங்களை அன்புடன் அழைக்கின்றேன். பாலகன் இயேசு உங்கள் அனைவரையும் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

**அருள்தாஸ் ஜேம்ஸ்**,D.D.
சென்னை மயிலை பேராயர்.

## ஒரு சொல்.......!

இறை இயேசுவின் விசுவாசிகளே

கிறிஸ்து பிறப்பு விழா நவநாள் என்னும் இச்சிறிய கையேட்டினை கிறிஸ்து பிறப்பு விழா பரிசாக உங்களுக்கு அளிக்கிறேன். இந்நவநாள் செபம் திருப்பலியின் போது மட்டுமல்லாமல் தேவ நற்கருணை ஆசீர்வாதத்தின் போதும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நவநாள் செபத்தை செபித்து வாழ நீவிர் தலைப்பட்டால், கிறிஸ்து பிறப்பு விழாவை சீரிய முறையில் கொண்டாட நீங்கள் ஆயத்தமாகி விட்டீர்கள் என்பது திண்ணம்.

2000 ஆண்டுகட்குமுன் இறைமகன் கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தபோது அவருக்கென ஓர் இடமில்லை. இவ்வுலகம் அவர் வருகையைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமின்றி வாளாவிலிருந்தது. ஆனால் கிறிஸ்து பிறப்பு விழாவின் போது 2000 ஆண்டுகட்குமுன் இருந்த நிலையில் நீங்கள் இருக்கக்கூடாது. எனவே, இக்கையேடு கிறிஸ்து பிறப்பு விழாவை நீங்கள் நன்முறையில் சிறப்பிக்க உங்களை ஆயத்தப்படுத்துவதோடு இறைக்குழந்தை பாலன் இயேசுவிடம் உங்களை இட்டுச்செல்ல பெரிதும் துணைபுரியும் என்பது என் துணிபு.

உங்களுக்கு உங்கள் குடும்பத்தாருக்கும் குழந்தை இயேசுவின் இனிய ஆசிர் கிட்ட இறைஞ்சும்.

அன்னை மரியில் உங்கள்

**அ. மனையில் ச.ச.**



## இறைவாக்கினர்களின் பாடல்
## அழைப்பு

(அனைவரும் நிற்கவும்)

முதல்வர் :-

**தேவராஜன் வருவார் / வாரும் ஆராதிப்போமே.**

எல்:-

**தேவராஜன் வருவார். / வாரும் ஆராதிப்போமே.**

1. சியோனே அகமகிழ்வாய், / எருசலேம், மகளே பூரிப்படைவாய்; / இதோ ஆண்டவர் வருவார். / அந்நாளில் பேரொளி வீசும், / மலைகள் இன்பம் துளிர்க்கும், / குன்றுகள் பாலும் தேனும் பொழியும் / ஏனெனில் மாபெரும் தீர்க்கதரிசி வருவார். / அவர் எருசலேமைச் சீராக்குவார். / (தேவ)
2. இதோ தாவீதின் குலத்தினின்று / மனு தேவன் வருவார் / அவர் சிம்மாசனம் ஏறுவதைக் காண்பீர். / அந்நாள் நீங்கள் ஆனந்தம் கொள்வீர். (தேவ)
3. இதோ நம் காவலரான ஆண்டவர் வருவார். / அவர் சிரமத்தில் முடி சூடிய இஸ்ராயேலின் ராயர். / ஒரு கடல் முதல் மறு கடல் வரை, / பூமியின் ஒரு கோடி முதல் மறு கோடி வரை / யாவையும் அடக்கி அரசு ஆளுவார். (தேவ)
4. இதோ ஆண்டவர் தோன்றுவார் , / அவர் சொல்லோ பொய்யாகாது. / அவர் தாமதம் செய்தாலும் எதிர்பாருங்கள் , / ஏனெனில் தாமதிக்காமல் வருவார். (தேவ)

5. அன்று ஆட்டுத்தோல் மீது பெய்த மழைபோல் ஆண்டவர் இறங்குவார். / அந்நாளில் நீதியும் சமாதானமும் செழிக்கும், / பூமி ஆளும் வேந்தர் எல்லோரும் போற்றி சேவிப்பர். (தேவ)

6. நமக்கெனப் பாலன் பிறப்பார். / அவரை வல்லபதேவன் என்பர். / தம்முடைய தந்தை தாவீதின் சிம்மாசனம் ஏறி அவர் செங்கோல் செலுத்துவார். / அவரது வல்லபத்தை அவர் தோளிலே காண்பீர். (தேவ).

7. உன்னத கடவுளின் நகரமான பெத்லகேமே, / உன்னிடமிருந்தே இஸ்ராயேலின் அதிபர் எழுந்தருள்வார். / அவர் வருகை நித்திய நாட்களின் துவக்கத்திலிருந்தது போல் ஆகும் / அவரை உலகெல்லம் போற்றிப் புகழும். / அவர் வருங்கால் நம் நாட்டில் சமாதானமேநிலைக்கும். (தேவ)

**டிசம்பர் 24 இயேசுநாதரின் பிறப்புக்கு முந்தின நாளில் தொடர்ந்து பாட வேண்டியது.**

8. நாளை பூமியில் பாவம் அழிந்தே தீரும் உலக மீட்பர் நம்மைஅரசாளுவார். பாரீர் (தேவ)

9. அருகில் தேவன் வந்துள்ளார்.
வாரும் ஆராதிப்போமே.

**திருப்பலி ஆரம்பம். தந்தை, மகன், தூய ஆவியின் ... ஆண்டவரே இரக்கமாயிரும்.**



குரு : சபை மன்றாட்டு :

டிசம்பர் 16

ஆண்டவரே விரைந்து வாரும். தாமதம் செய்யாதேயும். உமது தெய்வீக வல்லபத்தின் உதவியை எங்களுக்குத் தந்து இரக்கத்தை நம்பி உள்ளவர்களை உமது அன்பான வருகையினால் தேறுதல் அடையச் செய்தருளும். பிதாவாகிய இறைவனோடு பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மைமன்றாடுகிறோம்.

டிசம்பர் 17

இறைவா, மனுக்குலத்தைப் படைத்தவரும் மீட்டவரும் நீரே, என்றும் கன்னியான மரியாளின் உதிரத்தில் உம்முடைய வார்த்தையானவர் மனு உரு எடுக்கத் திருவுளம் கொண்டீர். எங்கள் மன்றாட்டுக்களைத் தயவாய்க் கேட்டருளும், எங்கள் மனித இயல்பில் பங்கு கொள்ளும் உம் திருமகன் தம் தெய்வீக இயல்பில் நாங்களும் பங்கு பெறச் செய்வாராக. உம்மோடு பரிசுத்த...

டிசம்பர் 18

எல்லாம் வல்ல, இறைவா, பழைய அடிமைத்தனத்தின் பாவச் சுமைஎங்களை அழுத்துகின்றது. எனவே நாங்கள் எதிர்பார்த்திருக்கும் உம் ஒரே திரு மகனின் புதுப் பிறப்பினால் எங்களை மீட்டருள்வீராக. உம்மோடு... ஆமென்.

டிசம்பர் 19

இறைவா, தூய மரியாளின் திருக்கனியை உமது மாட்சிமையின் சுடரொளியை உலகுக்கு வெளிப்படுத்தத் திருவுளம் கொண்டீர். இறைவன் மனு உருவான இந்த அரிய மறை உண்மையை முழு விசுவாசத்துடன் என்றும் கொண்டாட எங்களுக்கு அருள்வீராக. உம்மோடு.... ஆமென்.

டிசம்பர் 20

இறைவா, வானவர் தூதுரைக்க மாசற்றக் கன்னிமரி சொல்லற்கரிய உம் வார்த்தையானவரை ஏற்றுக்கொண்டாள். இதனால் அவள் இறைவன் உறையும் இல்லமாகி தூய ஆவியின் ஒளியால் நிரப்பப் பெற்றாள். ஆகவே நாங்கள் அவருடைய முன்மாதிரிகளைப் பின்பற்றுவோம். உம்மோடு... ஆமென்.

டிசம்பர் 21

ஆண்டவரே, உம்முடைய மக்களின் மன்றாட்டுகளுக்குக் கனிவாய் செவிசாய்த்தருளும். உம் ஒரே திருமகன் மனுவுருவானதைக் குறித்து மகிழ்கின்ற நாங்கள் அவர் தம் மகிமையில் வரும் போது முடிவில்லா வாழ்வைப் பரிசாகக் கொள்ளும் பேறு பெறுவோமாக. உம்மோடு....
ஆமென்.

டிசம்பர் 22

இறைவா, மரண தண்டனைக்குள்ளான மனிதனைக் கண்ணுற்ற நீர் உம் ஒரே திருமகனின் வருகையால் அவனை மீட்கத் திருவுளம் கொண்டீர். அவர் மனு உருவானதைப் பக்தி ஆர்வத்துடன்



விசுவாசிக்கிற நாங்கள் மீட்பராகிய அவருடன் தோழமைகொள்ளத் தகுதி பெறுவோமாக. உம்மோடு...
ஆமென்.

டிசம்பர் 23

எல்லாம் வல்ல நித்திய இறைவா, உம் திருமகன் மனிதனாகப் பிறக்க இருப்பதை அறிந்திருக்கும் நாங்கள் உம்மை வேண்டுகிறோம். கன்னிமரியிடமிருந்து மனு உருவாகி எம்மிடையே குடிகொள்ளத் திருவுளமான வார்த்தையானவர் தகுதியற்ற ஊழியர்களாகிய எங்களுக்குப் பரிவிரக்கம் காட்டுவாராக. உம்மோடு...
ஆமென்.

டிசம்பர் 24

ஆண்டவராகிய யேசுவே, உம்மை வேண்டுகிறோம். விரைந்து வாரும். காலம் தாழ்த்தாதேயும். உமது பரிவிரக்கத்தில் நம்பிக்கை கொண்டுள்ள உம் மக்கள் உமது வருகையால் ஆறுதலும் ஆதரவும் பெறுவார்களாக.
பிதாவாகிய இறைவனோடு...
ஆமென்.

(முதல் வாசகம் :- பழைய ஏற்பாட்டிலிருந்து வாசகம்)

| | | |
|---|---|---|
| டிசம்பர் 16 | ஏசாயா | 35: 1-4 |
| டிசம்பர் 17 | ஏசாயா | 40: 3-5 |
| டிசம்பர் 18 | ஏசாயா | 09: 1-6 |
| டிசம்பர் 19 | ஏசாயா | 11: 1-6,9 |
| டிசம்பர் 20 | ஏசாயா | 61: 1-4 |
| டிசம்பர் 21 | ஏசாயா | 60: 1-5 |
| டிசம்பர் 22 | ஏசாயா | 02: 2-3 |
| டிசம்பர் 23 | ஏசாயா | 40: 9-11 |
| டிசம்பர் 24 | ஏசாயா | 07: 13-14 |

## தியானப் பாடல்

1. வானமேமகிழ்வாய், பூமியே பூரிப்படைவாய், / மலைகளே ஆனந்தம் கொள்வீர்.
2. மலைகள் இன்பம் பொழிவதாக, / குன்றுகள் நீதியைத் தருவதாக.
3. ஏனெனில் வருவார் நம் ஆண்டவர், / தம் எளியோர் மேல் இரக்கம் கொள்வார்.
4. வானங்களே, மேல் நின்று நீதிமானைப் பனிபோல் பெய்யுங்கள், / மேகங்களும் நீதிமானைப் பொழிக, /மாநிலம் திறந்து மீட்பரைப் பிறக்கச் செய்க.
5. ஆண்டவா, எங்களை நினைவுகூறும். / உமது மீட்புடன் எம்மைக் காண வாரும்.
6. ஆண்டவா, எங்கள் மேல் கருணை காட்டி / எம்மை ஈடேற்றும் சுவாமி.
7. உலகாளும் செம்மறிப்புருவையே, / பாலைவனப் பாறையினின்று / சீயோன் மகளின் மலைக்கனுப்பிடும் சுவாமி
8. வல்லபக் கடவுளாகிய ஆண்டவரே, / எம்மை விடுவிக்க வாரும். / உம் திருமுகத்தைக் காட்டும். /நாங்கள் ஈடேற்றம் அடைவோம்.
9. வாரும் ஆண்டவா, / அமைதியில் எம்மைக் காண உத்தமஉள்ளமுடன் உம்மைக் கண்டுகளிப்போம்.
10. பூவுலகில் உம் திரு வழிகளையும் / எல்லா நாட்டினர் மத்தியில் உமது இரட்சிப்பையும் கண்டறிவோம்.
11. வாரும், உமது வல்லமைஎல்லாம் கொண்டு / எம்மைமீட்டுக் காத்திடும் சுவாமி.



12. ஆண்டவா, காலதாமதம் செய்யாமல் வாரும் / உம் மக்களின் பாவக் கட்டவிழ்த்துத் தாரும்.
13. வானைப் பிளந்து எந்நாள் இறங்கி வருவீரோ உம் கனிமுகத்தைக் கண்டாலோ மலைகளும் உருகிப்பாயுமே.
14. வானோர்க்கு மேல் வீற்றிருக்கும் தேவா! /வாரும் உம் திருமுகத்தை எமக்குக் காண்பித்தருள்வீரே.
15. தந்தை தன்னயன் தூய ஆவியானவர் / மூவருக்குமே புகழ் உண்டாவதாக.
16. ஆதியில் இருந்தது போல் இன்றும் என்றும் / முடிவில்லாக் காலமும் உண்டாவதாக.

**தேவ நற்கருளை ஸ்தாபகம் – நற்கருணைப் பாடல் ( அல்லது ) திருப்பலி – அல்லேலூயா.**

## ( நற்செய்தி வாசகம் )

| | | |
|---|---|---|
| டிசம்பர் 16 | மத்தேயு | 21: 28-32 |
| டிசம்பர் 17 | மத்தேயு | 01: 1-17 |
| டிசம்பர் 18 | மத்தேயு | 01: 18-24 |
| டிசம்பர் 19 | மத்தேயு | 01: 5-25 |
| டிசம்பர் 20 | மத்தேயு | 01: 26-38 |
| டிசம்பர் 21 | மத்தேயு | 01: 39-45 |
| டிசம்பர் 22 | மத்தேயு | 01: 46-56 |
| டிசம்பர் 23 | மத்தேயு | 01: 57-66 |
| டிசம்பர் 24 | மத்தேயு | 07: 67-69 |

மறையுரை

## விசுவாசிகளின் மன்றாட்டு 1

குரு: அன்பார்ந்த சகோதரரே, அன்று கன்னியின் திரு வயிற்றில் தம் ஒரே மகன் பிறக்கத் திருவுளமான இறைவன், இன்று நம் உள்ளங்களில் அவரைப் பிறக்கச் செய்யுமாறு உருக்கமாய் இறைஞ்சுவோமாக.

1. இறைவா, உம் திருமகனின் பிறப்பினால் நாங்கள் பெரிதும் பயனடைவதற்கு எங்கள் உள்ளங்களைப் பயன்படுத்தும்படியாக உம்மைமன்றாடுகிறோம்.

எல்: வாரும் ஆண்டவராகிய கிறிஸ்துவே வாரும்.

2. எல்லாம் வல்ல இறைவா, உண்மையான மனமாற்றத்தையும் தவ உணர்வையும் எங்கள் உள்ளங்களில் தூண்டி எழுப்பும்படியாக உம்மை மன்றாடுகிறோம். அமைதியின் ஊற்றாகிய இறைவா, உலகம் முழுமையிலும் அமைதி நிலவிட, பிணி நீங்கிட, பஞ்சம் பறந்திட, தீமைஒழிந்திடஅருள் புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

எல்: வாரும் ஆண்டவராகிய கிறிஸ்துவே வாரும்

3. இறைவா, எளியோர் நற்செய்தி கேட்டிட, உள்ளம் உடைந்தோர் மன ஆறுதல் பெற்றிட, சிறைப்பட்டோர் விடுதலை அடைந்திட வரம் அருளுமாறு உம்மைமன்றாடுகிறோம்.

எல்: வாரும் ஆண்டவராகிய கிறிஸ்துவே வாரும்

4. இறைவா, உலக மக்கள் யாவரும் உம் திருமகனையே தங்கள் ஆண்டவராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொள்ளும்படியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: வாரும் ஆண்டவராகிய கிறிஸ்துவே வாரும்

( நமது விண்ணப்பங்களை மௌனமாக எடுத்துரைப்போம் )

( நம் வானகத் தந்தையை நோக்கி செபிப்போம்.
பரலோகத்தில் இருக்கிற...)



குரு : உம் அடியார்களாகிய நாங்கள் அனைவரும் எங்கள் வாழ்வின் இன்பங்களிலும் துன்பங்களிலும் விவேகமுள்ள கன்னியரைப் போல விழித்திருந்து உம் திருமகன் இயேசுவை வரவேற்கும் படியாக உம்மைமன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

## விசுவாசிகளின் மன்றாட்டு 2

அன்பார்ந்த சகோதரர்களே, ஆண்டவருடைய வருகைக்காகக் காத்திருந்து தயார் செய்யும் நாம், நம் மன்றாட்டுக்களை பரமதந்தையிடம் சமர்ப்பித்து உருக்கமுடன் மன்றாடுவோமாக.

1. எங்கள் பரிசுத்த தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் இந்த திருவருகைக்காலத்தில் ஆண்டவருடைய வழிகளை ஆயத்தப்படுத்தி தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அவருடைய வருகைக்குத் தயார் செய்ய வேண்டுமென்று உம்மைமன்றாடுகிறோம்.

எல்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

2. எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று ஆண்டவர் பொறுமையாய் இருக்கிறார் என்பதை உணர்ந்து, கிறிஸ்துவ மக்கள் அனைவரும் மனம் மாறி, பரிசுத்த நடத்தையிலும், இறைப் பற்றிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

3. ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள் அவர் தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள் என்ற புனித திருமுழுக்கு யோவானின் குரலொலியைக் கேட்டு நாங்கள் எங்கள் ஆன்மாவைப் புனிதப் படுத்தட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

4. மேடு போன்று இருக்கின்ற அகங்காரத்தை அகற்றி, குழிகள் போன்று இருக்கின்ற குறைகளை நீக்கி, கோணலான வாழ்க்கையை நேர்ப்படுத்தி ஆண்டவரின் வருகைக்கு நாங்கள் நன்கு தயார் செய்யவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**(மௌனமாக நமது விண்ணப்பங்களை எடுத்துரைப்போம்) விண்ணரசின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கும் நாம் பணிந்து சொல்வோம்.**

குரு: எல்லாம் வல்ல நித்திய இறைவா, உமது திருமகனின் வருகைக்கு எங்கள் ஆன்மாவை ஆயத்தப்படுத்தி, அவர் தரவிருக்கும் வரங்களை அதிகமாய் பெற வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் வழியாக உம்மைமன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

## விசுவாசிகளின் மன்றாட்டு 3

குரு: அன்பார்ந்த சகோதரரே, நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் வருகையை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். அவர் எளியோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தவர்களைக் குணமாக்கவும் இவ்வுலகத்திற்கு வந்தார். அவ்வாறே இக்காலத்திலும் வறுமையுற்றோர்க்கெல்லாம் மீட்பளிக்குமாறு அவரது வருகைக்காக உருக்கமுடன் மன்றாடுவோம்.

**எல் : ஆண்டவராகிய இயேசுவே வாரும்.**

1. நமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரையும் ஆண்டவர் தம் அருட்கொடைகளால் நிரப்பிட எழுந்தருளி வரவேண்டுமென்று மன்றாடுவோம்.



2, நம்மைஆள்வோர் அனைவரும் பொது நலம் பேணுமாறு,அவர்களின் உள்ளங்களைத் திருத்திட எழுந்தருளி வர வேண்டுமென்று மன்றாடுவோம்.

**எல் : ஆண்டவராகிய இயேசுவே வாரும்.**

3. மக்களின் பிணிகளை அகற்றி, பசியைப் போக்கி, துன்பம் அனைத்தையும் துடைத்திட எழுந்தருளி வரவேண்டுமென்று மன்றாடுவோம்.

**எல் : ஆண்டவராகிய இயேசுவே வாரும்.**

**- (நமது விண்ணப்பங்களை மௌனமாக எடுத்துரைப்போம் ). நம் விண்ணப்பங்களை இரக்கம் மிகுந்த நம் மீட்பரின் சொற்களில் செபிப்போம்.**

**பரலோகத்தில் இருக்கிற...**

குரு : எல்லாம் எல்ல நித்திய இறைவா, அனைவரையும் மீட்கின்ற நீர் எவரும் அழிவுற விரும்புவதில்லை. உம் மக்களின் வேண்டுதலுக்கு செவி சாய்த்தருளும். உமது பராமரிப்பினால் உலகில் சமாதானம் நிலவுவதாக, உமது திருச்சபையும் அமைதியுடன் வாழ்ந்து பக்தியில் சிறந்தோங்குவதாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மைமன்றாடுகிறோம்.

**எல் : ஆமென்.**

## விசுவாசிகளின் மன்றாட்டு 4

குரு: அன்பார்ந்த சகோதரர்களே, மெசியாவாகிய கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பி, நம்மைமீட்டு, நம்மைமகிழ்வித்த அன்புத் தந்தையிடம் நம் மன்றாட்டுக்களை சமர்ப்பிப்போம்.

எல்: **ஆண்டவராகிய இயேசுவே வாரும்.**

1. ஆண்டவரே, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தூய திருமுழுக்கு யோவானைப் போல் கிறிஸ்துவின் வழிகாட்டிகளாக அமைய வேண்டும் என்று உம்மைமன்றாடுகிறோம்.

எல்: **ஆண்டவராகிய இயேசுவே வாரும்.**

2. ஆண்டவரே, கிறிஸ்துவ மக்களனைவரும் செபத்தில் நிலைத்திருந்து உமக்கு நன்றி கூறி மகிழ்ச்சியோடு வாழ்ந்து, தங்கள் உடல், மனம் முழுவதையும் குற்றமின்றி காக்க வேண்டுமென உம்மைமன்றாடுகிறோம்.

எல்: **ஆண்டவராகிய இயேசுவே வாரும்.**

3. ஆண்டவரே, கிறிஸ்துவின் வருகையானது நோயாளிகளுக்கு உடல் நலத்தையும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் எல்லோருக்கும் மீட்புச் செய்தியையும் தரவேண்டுமென்று உம்மைமன்றாடுகிறோம்.

எல்: **ஆண்டவராகிய இயேசுவே வாரும்.**

**நமது விண்ணப்பங்களை மௌனமாக எடுத்துரைப்போம், நம் விண்ணப்பங்களுக்கு அஸ்திவாரமிட்டு நம் மீட்பர் தந்த செபம் செபிப்போம். பரலோகத்தில் இருக்கிற...**



செபிப்போமாக

குரு: எல்லாம் வல்ல நித்திய இறைவா, உண்மையான மகிழ்ச்சியைத் தாரும் தந்தையே, வரவிருக்கும் கிறிஸ்துமஸ் விழாவை பெரும் மகிழ்வோடு கொண்டாட வேண்டிய தூய உள்ளத்தைத் தருமாறு எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மைமன்றாடுகிறோம்.

எல்: **ஆமென்**

## விசுவாசிகளின் மன்றாட்டு 5

குரு: அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, கிறிஸ்துமஸ் பெருவிழாவைக் கொண்டாடப் போகும் நாம், தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பி தந்தையிடம் நம் மன்றாட்டுகளை சமர்ப்பிப்போமாக.

1. எங்கள் திருத்தந்தை, அயர்கள், குருக்கள், துறவறத்தார்கள் அனைவரும், உலக மீட்பரின் வருகையை எல்லோருக்கும் அறிவிக்க வேண்டியஅருளைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

எல்: **ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

3. ஆண்டவரே, வியாதி, வறுமை, வருத்தம் ஆகியவைகளால் வாடுவோர் அனைவரும் கிறிஸ்துவின் வருகையால் உடல் நலமும், மன ஆறுதலும் பெறவேண்டுமென்று மன்றாடுகிறோம்.

எல்: **ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

4. ஆண்டவரே, இளைஞர், இளம் பெண்களும், சிறுவர், சிறுமிகளும் கிறிஸ்துமஸ் விழாவை தூய உள்ளத்துடனும், கிறிஸ்துவ, மனமகிழ்ச்சியோடும் கொண்டாட அருள் புரிய வேண்டுமென்று உம்மைமன்றாடுகிறோம்.

**எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

**( நமது விண்ணப்பங்களை மௌனமாக எடுத்துரைப்போம் )**

**நம் விண்ணப்பங்களுக்கு அஸ்திவாரமிட்டு நம் மீட்பர் தந்த செபம் செபிப்போம். பரலோகத்தில் இருக்கிற...**

குரு : எல்லாம் வல்ல நித்திய இறைவா, உண்மையான மகிழ்ச்சியைத் தாரும் தந்தையே, வரவிருக்கும் கிறிஸ்துமஸ் விழாவை பெரும் மகிழ்வோடு கொண்டாட வேண்டிய தூய உள்ளத்தைத் தருமாறு எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மைமன்றாடுகிறோம்.

**எல் : ஆமென்.**

## விசுவாசிகளின் மன்றாட்டு 6

குரு : அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, கிறிஸ்துமஸ் பெருவிழாவைக் கொண்டாடப் போகும் நாம், தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பிய தந்தையிடம் நம் மன்றாட்டுகளை சமர்ப்பிப்போமாக.

**எல் : வாரும் ஆண்டவரே, தாமதம் செய்யாதேயும்.**

1. உமது திருச்சபை உலகெங்கும் பரவும்படியாகவும், எல்லா மக்களும் ஒரே மந்தையில் சேரும் படியாகவும்...

**எல் : வாரும் ஆண்டவரே, தாமதம் செய்யாதேயும்.**

2. நாட்டை ஆள்பவர்களும், நாட்டு மக்களும், போர் பூசல்களிலிருந்து விலகும்படியாகவும் அமைதியின் அரசர் அனைவரையும் ஆட்கொள்ளும்படியாகவும்...

**எல் : வாரும் ஆண்டவரே, தாமதம் செய்யாதேயும்.**



3. உலகின் மாந்தர் அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்கும்படியாகவும், ஏழைகளும், வறியவரும், அனாதைகளும், நோயாளிகளும் ஆறுதல் பெறும் படியாகவும்...

**எல் : வாரும் ஆண்டவரே, தாதமம் செய்யாதேயும்.**

4. உமது முதல் வருகையை நினைவுகூர்கின்ற நாங்கள் அனைவரும், உமது விண்ணக வருகைக்காக எம்மைத் தகுந்த விதமாகத் தயாரிக்க அருள்புரியும்படியாகவும்...

**எல் : வாரும் ஆண்டவரே, தாதமம் செய்யாதேயும்.**

**( நமது விண்ணப்பங்களை மௌனமாக எடுத்துரைப்போம் )**

**நம் விண்ணப்பங்களுக்கு அஸ்திவாரமிட்டு நம் மீட்பர் தந்த செபம் செபிப்போம். பரலோகத்தில் இருக்கிற...**

குரு : எல்லாம் வல்ல நித்திய இறைவா, உண்மையான மகிழ்ச்சியைத் தாரும் தந்தையே, வரவிருக்கும் கிறிஸ்தமஸ் விழாவை பெரும் மகிழ்வோடு கொண்டாட வேண்டிய தூய உள்ளத்தைத் தருமாறு எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மைமன்றாடுகிறோம்.

**எல் : ஆமென்.**

## விசுவாசிகளின் மன்றாட்டு 7

குரு : அன்புமிக்க சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றோம். அவர் எளியோருக்கு நற்செய்தியை அறிவிக்க இவ்வுலகிற்கு வந்தார். அவ்வாறே அவர் இக்காலத்திலும் வறுமையுற்றோருக்கெல்லாம் மீட்பளிக்குமாறு அவரது இரக்கத்தை உருக்கத்துடன் வேண்டுவோமாக.

**எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக்கேட்டருளும்.**

1. உமது திருச்சபையில் எழுந்தருளி அதை என்றும் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

2. உமது பாதுகாவலினால் இக்காலத்தில் உலகமெங்கும் அமைதி நிலவ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

3. உமது இரக்கப் பெருக்கினால் மக்களின் பிணிகளை அகற்றி, பசியைப் போக்கி இடர் அனைத்தையும் தவிர்க்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

4. மக்களின் முன்னிலையில் உமது அன்பின் மெய்யான சாட்சிகளாய் நாங்கள் விளங்க வேண்டுமென்று இறைவா உம்மைமன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

(நமது விண்ணப்பங்களை மௌனமாக எடுத்துரைப்போம்)

நம் விண்ணப்பங்களுக்கு அஸ்திவாரமிட்டு நம் மீட்பர் தந்த செபம் செபிப்போம். பரலோகத்தில் இருக்கிற...

குரு : எல்லாம் வல்ல நித்திய இறைவா, உம் திருமகன் மனிதனாகப் பிறக்கவிருப்பதை அறிந்துள்ள நாங்கள் தாழ்மையுடன் உம்மைவேண்டுகிறோம். கன்னி மரியிடமிருந்து மனுவுருவாகி எம்மிடையே குடிகொள்ளத் திருவுளமான வார்த்தை தகுதியற்ற ஊழியர்களாகிய எங்களுக்கு பரிவிரக்கம் காட்டுவாராக. உம்மோடு தூய ஆவியின்...

எல் : ஆமென்.



## விசுவாசிகளின் மன்றாட்டு 8

குரு : அன்பின் இறைவா! வழிமேல் விழி வைத்து உமது வருகையை எதிர்பார்க்கும் பிள்ளைகள் நாங்கள். உமது வருகைக்குத் தயார் செய்யும் முறையில் நாங்கள் உம்மிடம் கேட்கும் வரங்களையும், மன்றாட்டுகளையும் அருள்கூர்ந்து கொடுக்க உம்மிடம் இப்போது வேண்டுகிறோம்.

1. எம் திருத்தந்தையையும், மறை ஆயர், ஆயர் குழுவினர், குருக்கள், துறவியர் அனைவரையும் உம் அருட்கொடைகளால் நிரப்ப வேண்டுமென்று இறைவா உம்மைமன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளம்.

2. எங்களை ஆள்வோர் பொது நலம் பேணுமாறு அவர்களின் உள்ளங்களை உம் திருவுளத்திற்கேற்ற வழியில் நீர் நடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

3. அநியாயமாய்த் துன்பத்திற்கு உள்ளாகி அவதிப்படுவோரைத் தேவரீர் கருணையுடன் விடுவிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

4. தேவரீர் வரும்போது நாங்கள் கண் விழித்துக் காத்திருப்பதை நீர் காண வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நமது விண்ணப்பங்களுக்கு அஸ்திவாரமிட்டு நம் மீட்பர் தந்த செபம் செபிப்போம்.

பரலோகத்தில் இருக்கிற...

குரு : எல்லாம் வல்ல நித்திய இறைவா, உம் திருமகன் மனிதனாகப் பிறக்கவிருப்பதை அறிந்துள்ள நாங்கள் தாழ்மையுடன் உம்மைவேண்டுகிறோம். கன்னி மரியிடமிருந்து மனுவுருவாகி எம்மிடையே குடிகொள்ளத் திருவுளமான வார்த்தை தகுதியற்ற ஊழியர்களாகிய எங்களுக்கு பரிவிரக்கம் காட்டுவதாக. உம்மோடு தூய ஆவியின்... .

எல் : ஆமென்

## விசுவாசிகளின் மன்றாட்டு 9

குரு : அன்பின் இறைவா! வழிமேல் விழிவைத்து உமது வருகையை எதிர்பார்க்கும் பிள்ளைகள் நாங்கள். உமது வருகைக்குத் தயார் செய்யும் முறையில் நாங்கள் உம்மிடம் கேட்கும் வரங்களையும், மன்றாட்டுகளையும் அருள்கூர்ந்து தந்திட உம்மிடம் இப்போது வேண்டுகிறோம்.

எல் : ஆண்டவரே , எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. எல்லாம் வல்ல இறைவா, இவ்வுலகில் பயணம் செய்யும் திருச்சபை, உமது வருகைக்குத் தன்னைத் தகுந்த முறையில் தயார் செய்ய உதவி செய்யும் படியாக மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

2. திருச்சபையின் தலைவராகிய இறைவா ! எங்கள் பரிசுத்த திருத்தந்தை, மறை ஆயர்கள், குருக்கள், மற்றும் ஞான அதிகாரிகள் எங்களை உமது வருகைக்குத் தயார் செய்வதில் அதிக ஆர்வத்துடனும் மனஉறுதியுடனும் பணிபுரிய அருளுமாறு உம்மைமன்றாடுகின்றோம்.



எல் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

3. கைவிடப்பட்டோரின் ஆறுதலான இறைவா! ஏழைகளும், அனாதைகளும், கைவிடப்பட்டோரும், எளியவரும் உமது இரக்கத்தையும், அருளையும் பெற்றிட, தங்கள் வாழ்க்கையில் உம்மைஎன்றுமே பின்பற்ற அவர்களுக்கு வேண்டிய ஆதரவும் அன்பும் கொடுக்கும்படியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

4. அனைத்துலகின் இறைவா! இங்குள்ள நாங்கள் அனைவரும், எங்கள் அயலாருக்கு, குறிப்பாகத் தாழ்நிலையில் உள்ளோருக்கு உதவி செய்வதில்தான் உண்மையான அன்பு அடங்கியுள்ளது என்பதை உணரும்படியாக உம்மைமன்றாடகின்றோம்.

எல் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

(நமது விண்ணப்பங்களை மௌனமாக எடுத்துரைப்போம்)

நம் விண்ணப்பங்களுக்கு அஸ்திவாரமிட்டு நம் மீட்பர் தந்த செபம் செபிப்போம். பரலோகத்தல் இருக்கிற...

குரு : ஆண்டவரே விரைந்து வாரும். தாமதம் செய்யாதேயும். உமத தெய்வீக வல்லபத்தின் உதவியை எங்களுக்குத் தந்து உமது இரக்கத்தை நம்பி உள்ளவர்கள் உமது வருகையின் ஆறுதல்களினால் தேறுதல் அடையச் செய்தருளும், எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

காணிக்கைப் பாடல் (அல்லது) மாண்புயர்

## Antiphons for Magnificat

டிசம்பர் 16

இதோ ராஜன் வருவார் பூமியின் நாதன், நம் அடிமை நுகத்தடியை அவரே நீக்கிடுவார்.

டிசம்பர் 17

ஓ ஞானமே! உன்னதரின் வாயினின்று வெளியாகி, கோடியினின்று கோடியைத் தொட்டு, வன்மையோடும் இனிதோடும் எல்லாம் சீராய் அமைத்தாய். வாராய், விவேகத்தின் வழியை எமக்குக் கற்றுத் தாராய்.

டிசம்பர் 18

ஓ அண்டவரே ! இஸ்ராயேல் வீட்டின் ராயனே, சுவாலை விட்டெரிந்த முட்செடியில் மோயீசனுக்கோர் நாள் சீனாயில் கற்பனை ஈந்தாய், வாராய், கரத்தை நீட்டியே எங்களை மீட்டுத்தாராய்.

டிசம்பர் 19

ஓ யெஸ்ஸேயின் வேரே! மாந்தருக்கோர் அடையாளமே, பூ வேந்தர் உன் முன்னால் அடக்கவார் நாவை ; பாரரோர் யாரும் வேண்டுவார் உன்னை. வாராய் எம்மைஅன்போடு மீளாய், தாமதம் வேண்டாமே.

டிசம்பர் 20

ஓ தாவீதின் திறவுக்கோலே ! இஸ்ராயேல் வீட்டின் செங்கோலே. நீ திறக்க, மூட எவருமில்லை, நீ மூடத் திறக்க யாருமில்லை. வாராய், சாவின் நிழலிலும் இருளிலும் வாழ்வோரைக் கட்டவிழ்த்து சிறையினின்று வெளியேற்றிக் காராய்.

டிசம்பர் 21

ஓ உதயமே! நித்ய ஒளிச்சுடரே, நீதியின் சூரியனே, வாராய், சாவின் இருளிலும் நிழலிலும் வாழ்வோர் மீது ஒளியை வீசுவாய்.



டிசம்பர் 22

ஓ உலகாள் வேந்தே.! மானிடரின் அலாதி அன்பே. வாழ்வின் மூலைக்கல்லே, ஈரையும் ஒன்று செய்வோனே. வாராய், மண்ணினின்று உருவான மானிடனை ஈடேற்றாய்.

டிசம்பர் 23

ஓ எம்மானுவேலே ! சட்ட கர்த்தா, எம் கோவே. பாரால் எதிர்பார்க்கப்பட்டோனே, அனைவரின் இருள் மீட்போனே, வாராய், மீட்டெம்மைக் காராய், ஆண்டவா, எங்கள் தேவா.

டிசம்பர் 24

வானினின்று ஆதவன் எழுந்தக்கால், ராஜேஸ்வரன், மஞ்சம் நீங்கி ஏகும் மணாளனைப் போல், பிதாவினின்று புறப்படக் காண்பீர்.

## தேவதாயின் புகழ் கீதம்

1. என் ஆன்மா ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் இறைவனிடம் என் மனம் மகிழ்கின்றது.
2. தன்னடிமைத் தாழ்மையினை அவர் கருணைக் கண்கொண்டதினால், இதோ எல்லாத் தலைமுறைகளும், என்னைப் பாக்கியவதி என்பார்.
3. ஏனெனில் வல்லபமுள்ளவர் எனக்குப் பெரியனபுரிந்தார். அவர் பெயர் புனிதம் ஆனதாம்.
4. அவருடைய கிருபையும் தலைமுறை தலை முறையாய் அவருக்குப்பயந்துநடப்போர்க்கே.
5. தன் கரத்தின் வலிமைகாட்டி இருதய சிந்தனையில் கர்வமுள்ளோரைச் சிதறடித்தார்.
6. வல்லபமேஉள்ளோரை அவர் இருக்கையிலிருந்து தள்ளி தாழ்ந்தோரை உயர்த்தினார்.

7. பசித்தோரை இருப்போரை அவர் நன்மைகளால் நிரப்பி தனவான்களை வெறுமையாக அனுப்பினார்.
8. தன் கிருபையை நினைவுகூர்ந்து தம் தாசராம் இஸ்ராயேலைக் காத்திட்டார்.
9. நம் அரும் பிதாப் பிதாக்களாம் அபிரகாமக்கும் ஊழியுள்ள காலம் அவரது வித்துக்கும் அவர் தந்த வாக்குறுதி அதுவேயாம்.
10. பிதாவுக்கும், சுதனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் தோத்திரம் உண்டாகுக.
11. ஆதியிலே இருந்ததுபோல் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. - ஆமென்.

**மாண்புயர்**

1. சர்வேசுரா, இந்த வியப்புகுரிய திரு அருட்சாதனத்திலே உம்முடைய திருப்பாடுகளின் நினைவை எங்களுக்கு விட்டுச் சென்றீர்; உமது திருவுடல், திரு இரத்தம் இவற்றின் மறைபொருளை வணங்கும் நாங்கள் உம் மீட்பின் பலனை இடைவிடாமல் அனுபவிக்க அருள் புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம், என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே.

**எல் : ஆமென்.**

2. இறைவா,உமது திருமகனின் பாஸ்கா மறைபொருள் வழியாக மானிடரின் மீட்பு பணியை நிறைவேற்றினீர். இத்திருவருட்சாதனத்தின் மூலம் அவருடைய மரணத்தையும், உயிர்ப்பையும் விசுவாச அறிக்கையிடும் நாங்கள், உமது மீட்பின் பணியை இடைவிடாது உணரச்செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**எல் : ஆமென்.**



3. இறைவா, உமது திருமகன் கிருஸ்துவை மானிடரின் தலைமைக் குருவாக நியமித்தீர். உமது நன்மைத்தனத்தினால் அவர் தமது திரு இரக்கத்தால் தமக்கு சொந்தமாக்கிக்கொண்ட மக்கள் அவர் மரணத் திருப்பலியில் பங்கு கொண்டு அவரின் திருச்சிலுவை, உயிர்ப்பு இவைகளினால் ஆச்சரியத்திற்குரிய ஆன்மீக வலிமையைப் பெற அருள் புரியும். இவற்றை எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மைமன்றாடுகிறோம்.

**எல் : ஆமென்.**

4. ஆண்டவராகிய இயேசுவே, நற்கருணையை திருவருட்சாதனமாகவும், ஒற்றுமையின் சின்னமாகவும், சிநேகத்தின் பிணைப்பாகவும், ஏற்படுத்தினீரே, உமது திருச்சபைக்கு உம் அன்பின் கொடையை அளித்தருளும். பிரிந்துள்ள மக்களை இப்பலிப் பீடத்தைச் சுற்றி ஒன்று சேரச் செய்தருளும். என்றென்றும் வாழ்ந்து இறைவனிடம் ஆட்சி செய்கின்றவர் நீரே!

**1. கருணைக் கடலே**

கருணைக் கடலே - வா
கதித்த தயா - ப - ரா - வா
சுருதி மறையோர்க்கு
சுடரொளியே - வா

1. ஆதோனா - யி - ஆனந்தமே
ஆவலுடன் காத்திருக்கும்
அடியோர்களைச் சந்திக்க - கருணை

2. எம்மானுவேல் - ஏக நாதா
எங்கள் பாவ - தோஷம் தீர
ஏன் இன்னும் வரத்தாமதம்

## 2. துதிப் பாடல்

1 தெளி குரல் மறைந்தவை
எல்லாம் துலக்கிக் கூறுதே
கனவுகள் தூரம் கூறுதே
வானின்று இயேசு தோன்றுகிறார்.

2. வந்தார் செம்மறிப் புருவை
சும்மா எம் கடன் தீர்க்கவே
சேர்ந்தெல்லோரும் கண்ணீர் விட்டே
தாழ்ந்து கேட்போம் மன்னிப்பையே.

3. உலகின் திவ்ய கர்த்தரே
அடிமை ஊன் தரித்தாரே
மனுவை மனு மீட்கவே
தாம் படைத்தோரைக் காக்கவே,

4. கற்பு நிறை தாய் வயிற்றில்
வானருள் புகுந்திடவே
தானறியா ரகசியம்
கன்னி உதரம் தாங்கிற்றே.

5. நிர்மல மார்பகம் தேவ
ஆலயமாம்
திடீரென
கணவனறியாத் தூயவள்
மகனைக் கர்ப்பம் தரித்தாள். ஆமென்.

## 3. எழுந்திடாய் உலகமே

எழுந்திடாய் உலகமேஇருளில் நின்றெழுந்திடாய்
குழந்தையாம் இயேசுவின் அருள்ஒளி தந்திடாய்
எழுந்திடாய் உலகமே எழுந்திடாயோ?

நடுநிசி வேளையில் நடுங்கும் குளிரினில்
பயமிகு தனிமையில் பாலகன் அழுகின்றார்



1. வண்ண பொலிவாம் வானவர் பாடிட
எண்ணரும் இசையிலே தன்னருள் பொழிந்திட
மன்னவர் மன்னனை மாண்புடன் மடியினில்
அன்னையின் அன்போடு தாய்மரி ஏந்திட

2. குளிரின் கொடுமைமேனியை வாட்டிட
இருளின் அட்சி அருளுக்குப் பணிந்திட
ஒளியாம் திருமகன் குழந்தை வடிவினில்
அழியா இன்பம் அளித்திடும் பாலகன்.

## 4. உருவில்லா இறைவன் உருவானார்

உருவில்லா இறைவன் உருவானார். இன்று
மரியின் மடியில் மகனானார்

1. ஆயிரம் ஆண்டுகள் காத்திருந்தார். மக்கள்
மாபரன் வருகையைப் பார்த்திருந்தார்
வந்தது அவருக்கு நற்செய்தி / (2) இன்று
மீட்பர் பிறந்த அருஞ்செய்தி

2. விண்ணக தூதர்கள் கூடிவந்தார் - அன்று
இறைமகன் பிறப்பைக் கூறவந்தார்
மகிமைவிண்ணில் இறைவனுக்கு (2) இன்று
அமைதி மண்ணில் நல்லோர்க்கு

## 5. கன்னி ஈன்ற செல்வமே

கன்னி ஈன்ற செல்வமே- இம்
மண்ணில் வந்த தெய்வமே
கண்ணே மணியே அமுதமே
என் பொன்னே தேனே இன்பமே
எண்ணம் மேவும் வண்ணமே
என்னைத் தேடி வந்ததேன்
ஆரிரோ - ஆராரோ - 2

1. எங்கும் நிறைந்த இறைவன் நீ
நங்கை உதரம் ஒடுங்கினாய்
ஞாலம் காக்கும் நாதன் நீ
சீலக் கரத்தில் அடங்கினாய்
தாய் உன் பிள்ளை அல்லவா
சேயாய் மாறும் விந்தை ஏன்?

2. வல்ல தேவன் வார்த்தை நீ
அன்னை துணையை நாடினாய்
இன்ப வாழ்வின் மையம் நீ
துன்ப வாழ்வைத் தேர்ந்ததேன்...

## 6. கன்னித்தாயின் மடியிலே

கன்னித்தயின் மடியிலே
கருணைத் தந்தை வடிவிலே
தவழும் புனித குழந்தைக்குத்
தெள்ளுத் தமிழின் சுவையிலே
தெரிந்து இசைப்போம் உலகிலே
ராரி ராரோ, ராரி ராரி ராரோ,
ராரி ராரி ராரோ ராரி ராரி ராரி ராரோ
உண்மைஅனைத்தும் மலருதே
உவகை வெள்ளம் பெருகுதே
உலகில் உந்தன் வரவிலே
உண்மைஅமைதி நிலவுதே

1. விண்ணில் தேங்கம் சாந்தியை
உன்னி தாங்கி வந்தாயோ
அருளின் கனியாய் எழுந்து வா
அழியா இனிமைபொழிந்து வா
இருளில் வாடும் இதயங்கள்
இசைக்கும் மண்ணில் மகிழ வா



2. உந்தன் கண்ணில் ஒளிர்வது
உயிரின் அறிவு அல்லவா
அகத்தில் தேங்கும் செல்வத்தை
அமைதி என்று சொல்லவா
அன்பு காட்டும் நல்லவா
அமைதி ஊட்டும் வல்லவா
சோர்ந்த எங்கள் உள்ளத்தை
தேற்றி நல்கி வெல்லவா.

### திருவருகைக் கால செபங்கள்

1. அருள் நிறைந்த மரியே நீர் திருமகனுக்கு மாதாவாகக் குறிக்கப்பட்ட நேரம் ஆசீர்வதிக்கப்பட்டதென்று எல்லோரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணுவோம். ( பர 10 அருள் 1 பிதா )
2. அருள் நிறைந்த மரியே நீர் உம் உறவினளான எலிசபெத்தை சந்தித்த நேரம் ஆசீர்வதிக்கப்பட்டதே. எல்லா தலைமுறையினரும் உம்மைப் பேறுடையாள் என்று போற்றி ஆண்டவருக்குத்தோத்திரம் பண்ணக்கடவோம். ( பர 10 அருள் 1 பிதா )
3. அருள் நிறைந்த மரியே நீர் உம் திருமகனைப் பெற்ற நேரம் ஆசீர்வதிக்கப்பட்டது என்று எல்லோரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக்கடவோம். ( பர 10 அருள் 1 பிதா )
4. அருள் நிறைந்த மரியே நீர் உம் திருமகனை முதல் முறை கட்டி அரவணைத்த நேரம் ஆசீர்வதிக்கப்பட்டது என்று எல்லோரும் ஆண்டவருக்குத் தோத்திரம் பண்ணக்கடவோம். ( 1 பர 10 அருள் 1 பிதா )
5. அருள் நிறைந்த மரியே நிர் உம் திருமகனுக்கு அமுதூட்டிய நேரம் ஆசீர்வதிக்கப்பட்டது என்று எல்லோரும் ஆண்டவருக்கு தோத்திரம் பண்ணக்கடவோம். (1 பர 10 அருள் 1 பிதா )

## கிறிஸ்துமஸ் செபம்

அன்பு தந்தையே இறைவா! நாங்கள் உம் திருமகன் இயேவின் மனித அவதாரத்தின் மறை உண்மையை முழுமையாகப் புரிந்துகொள்ளச் செய்தருளும். இதனால் நாங்கள் வானதூதர்களின் புகழ்ப்பாடலிலும், இடையர்களின் மகிழ்ச்சியிலும், ஞானிகளின் ஆராதனையிலும் பங்கு பெறுவோமாக!

பகைமையின் கதவுகளை அடைத்துவிட்டு அன்பின் கதவுகளை உலகமெங்கும் திறந்து விடச்செய்தருளும். நாங்கள் அன்பாக அளிக்கும் கொடைகளும், வாழ்த்துகளும் அன்பினையும், நல்லெண்ணத்தையும் கொண்டிருப்பவனாக. குழந்தை இயேசு கொண்டு வரும் அருள் வரங்களால் தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். தூய்மையான இதயத்துடன் மகிழ்ச்சியாக இருக்க எங்களுக்குக் கற்பித்தருளும். கிறிஸ்து பிறப்பின் காலை வேளையில் உமது பிள்ளைகள் என்ற மகிழ்ச்சியால் எங்களை நிரப்பியருளும். கிறிஸ்து பிறப்பின் மாலை வேளையில் நன்றி நிறைந்த நினைவுடனும், மன்னித்தோம். மன்னிப்பைப் பெற்றோம் என்ற உணர்வுடன் எங்களை உறங்கச் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்தவின் வழியாக உம்மைமன்றாடுகின்றோம். ஆமென்.



## என் ஆன்மா

1. என் ஆன்மா அகமகிழ்ந்து / ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது
   என் மீட்பராம் கடவுளை நினைத்து என் / இதயம் களிகூறுகின்றது
2. ஏனெனில் தாழ்நிலைநின்ற தம் அடியாளை கண்ணோக்கினார் /
   இதோ இன்னாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் /
   என்னைப் பேரு டையாள் எனப் போற்றுமே
3. ஏனெனில் வல்லமைமிக்க அவர் எனக்கு /
   அரும்பெருஞ்செயல் பல புரிந்தார் /
   அவர்தம் திருப்பெயரும் புனிதமாமே
4. அவரது இரக்கம் தலைமுறை தலைமுறை யெனவாக
   அவருக்குப் பயந்து நடப்போர்க்கே
5. அவர்தம் கைவன்மையை வெளிப்படுத்தி
   நெஞ்சில் செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்
6. வலியோரை அரியணை அகற்றிவிட்டு
   தாழ்ந்தோரை உயர்த்தினார்
7. பசித்தோரை நலன்களால் நிறையச் செய்து /
   செல்வந்தரை வெறுங்கையராய் அனுப்பி விட்டார்
8. நம் முன்னோருக்கு அவர் சொன்னதுபோலவே
   ஆபிரகாமுக்கும் அவர் வழிவந்தோருக்கும் / என்றென்றும்
   இரக்கம் காட்ட நினைவு கூர்ந்து /
   தம் அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்
9. பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் /
   மகிமை உண்டாவதாக
10. ஆதியில் இருந்ததுபோல / இப்போதும் எப்போதும்
    என்றென்றும் இருப்பதாக, ஆமென்.